இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 08-05-2025

# மாநிலத்தையும் .... மனங்களையும்...!



**ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது திராவிட நாயகன் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஆறாவது முறை திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர வைத்தவர் அவர். ஏழாவது முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர வைக்கப் போகிறவரும் அவரே!**

**அவரே தலைவர்! தலைவர்களுக்கு எல்லாம் தலைவராக 2018 முதல் தலைநிமிர்ந்து நிற்கிறார்!**

**அவரே முதல் அமைச்சர்! முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதலமைச்சராக 2021 முதல் தன்னையும் உயர்த்தி - தமிழ்நாட்டையும் உயர்த்திக் காட்டி விட்டார்!**

அவரைக் கலைஞர் அல்ல என்றார்கள். இவர் பெரியாரை பேசமாட்டார் என்றார்கள். அண்ணா இல்லை இவர் என்றார்கள். கலைஞரைப் போல சமாளிக்க முடியாது என்றார்கள். ஆட்சிக்கு வர முடியாது என்றார்கள். அவருக்கு கட்டம் சரியில்லை என்றார்கள். அவரால் ஆட்சி செய்ய முடியாது என்றார்கள். மோடி நசுக்கி விடுவார்கள் என்றார்கள். அமித்ஷாவை எதிர்கொண்டு நிற்க முடியாது என்றார்கள். பா.ஜ.க. ஆட்சி, எந்த உதவியும் செய்யாமல் நசுக்கி விடும் என்றார்கள். பா.ஜ.க.வை அனுசரித்துச் சென்றால் தான் ஆட்சி நடத்த முடியும் என்றார்கள். எதிர்ப்பு அரசியல் சாத்தியம் இல்லை, சரணாகதி அரசியல் தான் கை கொடுக்கும் என்றார்கள். நிதி இல்லை என்றார்கள். வெறும் கையில் முழம் போட முடியாது என்றார்கள். திராவிடமே இனி அவ்வளவுதான் என்றார்கள். திராவிட இயக்கத்துக்கு முற்றுப்புள்ளி என்றார்கள்.

**என்றவர்கள் அனைவரும் இவரது சாதனைகளை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வேதனைகளையும் எண்ணிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.**

பழனிசாமி பதவியை விட்டு இறங்கும் போது, 'ஆமாம்! தரையோடு தரையாக ஊர்ந்து கொண்டுதான் இருந்தது தமிழ்நாடு'. இதைச் சொன்னால் அவருக்கு கோபம் வருகிறது. கோபம் வரத்தான் செய்யும். சசிகலாவுக்கு ஒழுங்காக கப்பம் கட்டுவதாக நடித்து பதவியைப் பெற்று, அவரது காலையே வாரி - பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக மாறி - தமிழ்நாட்டைச் சூறையாடி - தரைமட்டத்துக்கு தாழ்த்தியதுதான் பழனிசாமியின் சாதனை.

**பழனிசாமியின் சாதனையை அன்றைய (7.12.2020) 'இந்தியா டுடே' என்ன சொன்னது தெரியுமா...?**

★ உள்கட்டமைப்பில் 20 வது இடம் , ★ ஐந்து ஆண்டுகளின் செயல்பாட்டில் 19 வது இடம், ★ விவசாயத்தில் 19 ஆவது இடம், ★ சுற்றுலாவில் 18 ஆவது இடம், ★ உள்ளடக்கிய வளர்ச்சியில் 18 ஆவது இடம், ★ தொழில் முனைவோர் முன்னேற்றத்தில் 14 ஆவது இடம், ★ ஆட்சி நிர்வாகத்தில் 12 ஆவது இடம், ★ தூய்மையில் 12 ஆவது இடம், ★ சுகாதாரத்தில் 11 ஆவது இடம், ★ கல்வியில் 8 ஆவது இடம், ★ பொருளாதார வளர்ச்சியில் 8 ஆவது இடம் ★ சுற்றுச்சூழலில் 6 ஆவது இடம், ★ சட்டம் ஒழுங்கில் 5 ஆவது இடம் - இதுதான் பழனிசாமியின் தமிழ்நாடு. மொத்தமே 20 மாநிலங்களை மட்டும் வைத்து எடுத்த அளவுகோலில் பெரும்பாலும் பழனிசாமி 19 ஆவது இடம். இத்தகைய தமிழ்நாட்டை தூக்கி நிறுத்தியதுதான் மாண்புமிகு முதலமைச்சரின் மகத்தான சாதனை.

தமிழ்நாடு 9.69 விழுக்காடு உண்மையான பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சி 6.5 விழுக்காடுதான். இதை வைத்துப் பாருங்கள். உண்மை புரியும். தமிழ்நாட்டின் வளர்ச்சியானது எத்தகையது என்பதை அறியலாம்.

**நிலையான விலைமதிப்பின் படி தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GSDP) ரூ.17 லட்சத்து 23 ஆயிரத்து 698 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் 24 - 25 ஆவது ஆண்டில் ரூ.3.58 லட்சம் ஆகும். இது தேசிய சராசரியான ரூ.2.06 லட்சத்தை விட 1.74 மடங்கு அதிகம் ஆகும். உயர் கல்வியில் தமிழ்நாட்டின் சேர்க்கை விகிதம் 47 விழுக்காடாக உயர்ந்து விட்டது. நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குறியீட்டில் தமிழ்நாடு 788 புள்ளிகளுடன் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.**

தமிழ்நாடு வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றுள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் 1.43 விழுக்காடு மக்கள்தான். வறுமைக் கோட்டுக்கு கீழ் இந்தியாவில் வாழும் மக்கள் தொகை 11.2 விழுக்காடு ஆகும். மருத்துவமனைகளை நோக்கி மக்கள் வருவதை மாற்றி மக்களைத் தேடி மருத்துவம் செல்லும் காலத்தை உருவாக்கி இருக்கிறது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டமானது ஐ.நா. அமைப்பின் விருதைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2.25 கோடி மக்கள் பயனடைந்து வருகின்றனர். 5.35 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் வரப்பெற்ற தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 47 விழுக்காடாக ஆகி இருக்கிறது.

காற்றாலை உற்பத்தி, சூரிய சக்தி, புத்தாக்க நிறுவனங்கள் உருவாக்கம், ஏற்றுமதி தரக் குறியீடுகள், மின்னணு சாதன ஏற்றுமதி ஆகிய அனைத்திலும் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடத்துக்கு வந்துவிட்டது தமிழ்நாடு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னது மாதிரி பாம்பு , நரி , அகழி , தடுப்புச் சுவர்களுக்கு இடையில் செய்யப்பட்ட சாதனைகள் தான் இவை. பாம்பின் கொடுக்கு முறிக்கப்பட்டது. விஷமுறிவு மருந்துகள் ( சமூகநீதி - மாநில உரிமைகள்) நிறைய கை வசம் பல்லாண்டுகளாக இருப்பில் உள்ளன. நரித் தந்திரங்களின் நாடகங்கள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் ஐம்பது ஆண்டுகளாக அறிந்தவர். அகழியையும் பார்த்தவர், ஆழ்கடலையும் பார்த்தவர். புயல்வீசும் காலத்தில் கலம் செலுத்துபவனே மிகச் சிறந்த படகோட்டி என்பதை மிசா காலம் முதல் அறிந்தவர். தடுப்புச் சுவர்களை உடைத்துத்தான் அரைநூற்றாண்டு கால அவரது அரசியலே இருக்கிறது.

ஏச்சும், பேச்சும், கேலியும், கிண்டலும் அவருக்கு உரமாய், அரணாய் இருந்து வளர்த்துள்ளது. களைகளைக் களைவதில் கூட களைப்படையாதவர். எதிரிகளை வீழ்த்திய எண்ணிக்கையை மனதுக்குள் வைத்திருப்பார்.

**கொள்கை, அவருக்கு ரத்தத்தால் ஊட்டப்பட்டது. இயக்கம், அவரை இளமைக் காலத்திலேயே அணைத்துக் கொண்டது. தியாகம், தன்னைத்தானே சோதித்துக் கொண்டது. உழைப்பு அவரது உடம்புக்குள் குடியேறிவிட்டது. நிர்வாகத் திறமை, அனுபவங்களால் வாய்த்தது. சமூக அக்கறை பெரியார் கொடுத்தார். பொறுமையை அண்ணா வழங்கினார். நினைத்ததை முடிக்க கலைஞர் கற்றுக் கொடுத்தார்.**

**அவர் பல்லாண்டுகளாக படித்த பாடத்தில் பாதியைத்தான் நான்காண்டுகள் நாட்டுக்கு கொடுத்திருக்கிறார். அடுத்த ஆண்டும் ஆள்வார். அடுத்தடுத்த ஐந்தாண்டும் ஆள்வார். மாநிலத்தை மட்டுமல்ல, மனங்களையும்!**

**தேர்தலே வைக்காமல் அவரை முதலமைச்சராக தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள் மக்கள். வாக்களிக்காமலேயே வாகை சூடி வைத்துள்ளார்கள் மக்கள்!**

---

### அரசின் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குங்கள்! உங்களோடு இணைந்து

# தமிழ்நாட்டின் பொற்காலத்தை தொடர்வோம்!

## பத்திரிகையாளர்கள் - ஊடகத்துறையினர் சந்திப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, நேற்று முன்தினம் (6.5.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற பத்திரிகையாளர்கள் – ஊடகத்துறையினர் சந்திப்பு நிகழ்வில், உரையாற்றினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாட்டின் முக்கிய நாளிதழ்களின் பதிப்பாளர்கள், தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகத் துறை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சென்னை, மே 8-**

**"அரசின் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குங்கள். உங்களோடு இணைந்து தமிழ்நாட்டின் பொற் காலத்தை தொடர்வோம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் - ஊடகத் துறையினர் சந்திப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (06.05.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் - ஊடகத்துறையினர் சந்திப்பு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:-

மிகவும் மகிழ்ச்சியான நாளில், நிறைவான மன நிலையில் எல்லோரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு இருக்கக்கூடிய பலரும் எனக்கு ஓரளவுக்கு தெரிந்த முகம்தான். நிறைய பேர்களிடம் நேரடியாகவும், தொலைபேசியிலும் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பவன் நான். அதே நேரத்தில், இன்றைக்கு ஒரே நேரத்தில், ஒரு சேர சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**ஐந்தாவது ஆண்டில்**
**திராவிட மாடல் அரசு!**

2021-ல், தமிழ்நாட்டில் மக்களுடைய நம்பிக்கையையும், ஆதரவையும் பெற்று, ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைந்தது. மே 7-ஆம் நாள் நான் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டேன். நாளைக்கு மே 7. திராவிட மாடல் அரசு ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கப்போகிறது.

தேர்தல் அறிக்கையில் சொன்ன பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல திட்டங்களையும் தொலைநோக்குப் பார்வையோடு அதையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும், புதிய புதிய திட்டங்களை அறிவிக்கிறோம் - நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் சாதனைத் திட்டத்தின் தொடக்கத்திற்கான நாளாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கெல்லாம் நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்!

அதேபோல், சாதனைக்கு மேல் சாதனையை நம்முடைய திராவிட மாடல் அரசு தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடும், அந்த மகிழ்ச்சியோடு தான் நான் உங்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பை இன்றைக்கு நான் பெற்றிருக்கிறேன்.

**சாதிக்க முடியும் என்பதற்கு -**
**4 ஆண்டு கால திராவிட மாடல் அரசே சாட்சி!**

நாம் எந்த மாதிரியான சூழலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம் மற்ற எல்லோரையும் விட பத்திரிக்கையாளர்களான உங்களுக்குதான் நன்றாக தெரியும்.

முந்தைய ஆட்சியாளர்களால் சீரழிந்த பத்தாண்டு கால நிர்வாகம் ஒருபக்கம். மதவாதம் உள்ளிட்ட பிற்போக்குத்தனங்களுக்கு இடமளித்து, இந்திய நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த நிலை ஒரு பக்கம். தமிழ்நாட்டுக்கு எந்தவித ஒத்துழைப்பையும் தர மறுக்கும் ஒன்றிய அரசின் போக்கு இன்னொரு பக்கம்!

இதையெல்லாம் சமாளித்து நாம் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு போகவேண்டும் என்ற எண்ணம்தான் எனக்குள் இருந்தது.

சரியான இலக்கை நிர்ணயித்து, அதனை நோக்கி உறுதியாக பயணித்து, நிச்சயம் சாதிக்க முடியும் என்பதற்கு இந்த நான்காண்டு கால திராவிட மாடல் அரசே சாட்சியாக அமைந்திருக்கிறது!

**கொள்கை - சேவை இரண்டிலும்**
**சிறந்து விளங்கும் நமது அரசு!**

அரசுகளை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

ஒன்று, கொள்கை அரசு!

இன்னொன்று, சேவை அரசு!

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், கொள்கை - சேவை இரண்டிலும் சிறந்து விளங்குகின்ற அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நான்காண்டுகளில் எப்படிப்பட்ட நெருக்கடிகள் எல்லாம் வந்தது. எவ்வளவு அவதூறுகள் பரப்பப்பட்டது என்பது வேறு யாரையும் விட உங்களுக்கு நன்றாக தெரியும். இருந்தாலும், எந்த இடத்திலும், நாங்கள் கொள்கையில் தடம் மாறவில்லை! எந்தச் சூழ்நிலையிலும் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் நாங்கள் சோர்ந்து போகவில்லை!

**அரசின் முத்திரைத் திட்டங்கள் ஏராளம்!**

அதனுடைய வெளிப்பாடுதான் நம்முடைய அரசின் முத்திரைத் திட்டங்கள்...

★ கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்

★ விடியல் பயணம் திட்டம்

★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

★ புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்கள்

★ நான் முதல்வன் திட்டம் என்று ஏராளமான திட்டங்களை வரிசைப்படுத்தி சொல்லிக் கொண்டே இருக்க முடியும்!

இந்தத் திட்டங்களை பற்றியெல்லாம், இங்கு வந்திருக்கும் முக்கியமான துறை அமைச்சர்கள் விளக்குவார்கள். அதேபோல், அதிகாரிகளும் அதைப்பற்றி விளக்கி கூறுவார்கள்.

**சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததற்கு நன்றி!**

இந்தச் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் உங்களுடைய பங்கு மிக அதிகம்! அதற்கு முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்!

நீங்கள் நேர்மையாகவும் - ஆக்கப்பூர்வமாகவும் அணுகுமுறையோடும் செயல்பட்டதால்தான் அரசின் சாதனைகள் மக்கள் மனதில் நிலைத்திருக்கிறது. இதற்காக நான் எத்தனை முறை உங்களுக்கு நன்றி சொன்னாலும் தகும்!

அரசின் செய்தி அறிக்கையை வெளியிடுவது - நேரலை செய்வது என்று மட்டுமல்லாமல், திட்டங்களின் நோக்கத்தை விளக்குவது - திட்டங்களால் பயன்பெற்றவர்களின் பேட்டிகளை பதிவு செய்து வெளியிடுவது என்று நம்முடைய அரசின் செயல்பாடுகளை விரிவாக கொண்டு சேர்த்திருக்கிறீர்கள்.

என்னைப் பொறுத்தவரைக்கும் - விமர்சனங்களை முன்வைத்தால், அதனை ஆக்கபூர்வமாக நான் ஏற்றுக் கொள்கிறவன். ஆலோசனைகள் இருந்தால், அதை உடனடியாக செயல்படுத்த உத்தரவிட்டிருக்கிறேன்.

உங்களுக்கு என்னுடைய அன்பான வேண்டுகோள் என்ன என்றால்...

இந்தியாவிற்கே முன்மாதிரியாக பல திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். நம்முடைய திட்டங்களை பார்த்து, பல்வேறு மாநில அரசுகள் அந்த திட்டங்களை அவர்கள் மாநிலங்களிலும் செயல்படுத்துகிறார்கள்.

**விமர்சனங்களால் செதுக்கப்பட்டது**
**என்னுடைய அரசியல் வாழ்க்கை!**

அப்படிப்பட்ட திட்டங்களை, நீங்கள் மனப்பூர்வமாக பாராட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விமர்சிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. என்னுடைய அறுபதாண்டுகால அரசியல் வாழ்க்கையே விமர்சனங்களால் செதுக்கப்பட்டிருப்பது உங்களுக்கு தெரியும். எனவே, நம்முடைய அரசின் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்துவதற்கான கருத்துகள் - ஆலோசனைகள் இருந்தால் நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள்... அந்தத் திட்டங்களை இன்னும் சிறப்பாக செயல்படுத்துவோம்!

எல்லோருடைய கருத்துகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் நான் கவனமாக இருக்கிறேன்.

ஆனால், சில ஊடகங்கள் விமர்சிப்பதில் காட்டும் ஆர்வத்தை, நல்ல திட்டங்களை பாராட்டுவதில் சில ஊடகங்கள் அதிகம் கவனம் செலுத்துவது இல்லை. எல்லோரையும் சொல்லவில்லை. பாராட்டுவதில் மட்டும் மென்மையான போக்கைத்தான் கடைப்பிடிக்கிறார்கள். அது ஏன் என்று தெரியவில்லை?

**தயங்காமல் விமர்சிப்பதுபோல**
**தயங்காமல் பாராட்டுங்கள்!**

பாராட்ட வேண்டியதை பாராட்டினால்தான், விமர்சனத்திற்கான மரியாதையும் மதிப்பும் கிடைக்கும்! எனவே, தயங்காமல் விமர்சிப்பது போன்று, தயங்காமல் பாராட்டுங்கள் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்திப்பில், உங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் கேட்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்காகதான் இந்தக் கூட்டத்தை கூட்டியிருக்கிறோம்.

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை மேலும் வலுப்படுத்த, உங்களுடைய ஆழமான - பரந்துபட்ட பார்வையும், அனுபவமும் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக நிச்சயமாக இருக்கும்!

சமத்துவம் - சமூகநீதி - சமதர்மம் சகோதரத்துவம் - மதச்சார்பின்மை - மொழிப்பற்று - இன உரிமை - மாநில சுயாட்சி - ஒன்றியத்தில் கூட்டாட்சி ஆகிய அரசியல் பண்பாடுகளைக் கொண்ட மண், நம்முடைய தமிழ்நாடு!

**எங்களின் இலட்சியப் பயணத்தில்**
**உங்களின் பங்கு மிக முக்கியம்!**

இந்த இலட்சியங்களை அடையும் பயணத்தில் நாங்கள் இருக்கிறோம். இந்தப் பயணத்தில், ஊடகங்களான உங்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

எனவே, தனிப்பட்ட ஸ்டாலினையோ - திராவிட முன்னேற்றக் கழக அரசையோ நீங்கள் பாராட்ட வேண்டும் என்று நான் கேட்கவில்லை; தமிழ்நாட்டை பாராட்டுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் தனித்துவத்தையும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

உங்கள் துணையோடு தமிழ்நாட்டை நிச்சயம் வளர்த்தெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!

எங்களுடைய அழைப்பை ஏற்று, இந்தச் சந்திப்பிற்கு வந்திருக்கும் உங்கள் எல்லோரையும் நான் வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன். என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்!

உங்களோடு இணைந்து, தமிழ்நாட்டின் பொற்காலத்தை தொடர்வோம்! தொடர்வோம்! தொடர்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.